# முகமூடி இந்தி ! ஒளிந்திருக்கும் முகம் சமஸ்கிருதம் !

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ் மண்ணிற்கு கொஞ்சமும் பொருத்தமில்லாத; தமிழர்களின் பண்பாட்டிற்கு நேரெதிரான கொள்கைகளைக் கொண்ட பா.ஜ.க.வும் அதன் கூலிப்படையினரும் மட்டும், தேசிய கல்விக் கொள்கையின் மும்மொழித் திட்டத்தை ஆதரித்தபடியே, “இந்தி – சமஸ்கிருதம் என்று எங்கே இருக்கிறது? மூன்றாவது மொழியாக, இந்தியாவில் உள்ள எந்த மொழியை வேண்டுமானாலும் படிக்கலாம். அயல் நாட்டு மொழிகளைக் கூடக் கற்கலாம்” என்று ஒரு ‘தினுசாக’ப் பேசுகிறார்கள். அடடா..! இவர்களுக்குத்தான் இந்திய மொழிகள் மீது எவ்வளவு அக்கறை?


கண்ணகி சிலை

மும்மொழித் திட்டம் என்ற பெயரில் என்னென்ன மொழிகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என அட்டவணையைப் பார்த்தால் பெரும்பாலான மாநிலங்களில் இந்தி அல்லது சமஸ்கிருதமே முன்னிலைப்படுத்தப்படுகிறது. தமிழர்கள் வாழும் யூனியன் பிரதேசமான


கீழடி

அந்தமான் நிக்கோபர் தீவுகளைத் தவிர வேறெங்கும் தமிழ் மொழி இடம்பெறவில்லை. இதுவும்கூட எத்தனை காலத்திற்கு நீடிக்கும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. பா.ஜ.க. ஆளும் ராஜஸ்தான் மாநிலத்தில் உருது ஆசிரியர்களுக்குப் பதில் சமஸ்கிருத ஆசிரியர்களை நியமிக்கும் மொழிப் பாசிசம் வெட்டவெளிச்சமாகியுள்ளது.


> **தமிழ்மொழியை இந்தியாலோ சமஸ்கிருதத்தாலோ ஒருபோதும் அழிக்க முடியாது.**

தமிழ்நாடு மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால், வடமாநிலங்களைப் போலத் தாய்மொழியை முற்றிலும் புறக்கணித்து சமஸ்கிருதமயமாக்கும் திட்டம் தான் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படும்.

தேசிய கல்விக் கொள்கை 2020ன் 4.17வது பிரிவு, “இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள செம்மொழியான சமஸ்கிருதம், இலக்கியம், கணிதம், அறிவியல், மருத்துவம், தத்துவம், இசை, அரசியல் இன்ன பிற உள்ளிட்ட பல்வேறு கலைச்செல்வங்களைக் கொண்டுள்ளது, இதனால் சமஸ்கிருத மொழி பள்ளிகளிலும், உயர் கல்வியிலும் அனைத்து நிலைகளிலும் மும்மொழித் திட்டத்தில் ஒன்றாக மாணவர்களுக்கு கற்றுத் தரப்படும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிறகே, மூத்த

> **ஒன்றிய பா.ஜ.க. அரசின் தேசிய கல்விக் கொள்கை மூலம் இந்தி-சமஸ்கிருத மொழிகளைத் திணிக்கும் முயற்சி.**

மொழியான தமிழ் மற்றும் இந்தியாவின் பிற மொழிகள் பற்றி 4.18வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும், சமஸ்கிருதத்துடன் கூடுதலாக (In addition to Sanskrit). தமிழ் உள்ளிட்ட மொழிகளைக் கற்பதற்கு ஆன்லைன்


ஜகதீப் தன்கர்

முறையில் வாய்ப்பளிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம், சமஸ்கிருதத்தைத் திணிக்கவும், தமிழ் உள்ளிட்ட மற்ற மொழிகளைப் புறங்கையால் ஓரங்கட்டவும் திட்டமிட்டே ஒன்றிய பா.ஜ.க. அரசு தேசியக் கல்விக் கொள்கையையும் அதன் வழியாக மும்மொழித் திட்டத்தையும் நம் மீது திணிக்கிறது என்பது தெளிவாகிறது.

தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் ஆசிரியர் பணியிடங்கள் காலியாகவே உள்ளன. இதுகுறித்து, கழகத்தின் நாடாளுமன்ற மாநிலங்களவைக் குழுத் தலைவரான திருச்சி சிவா அவர்கள், அந்தந்த மாநில மொழிகளைக் கற்பதற்கு கேந்திரிய வித்தியாலயா பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற பட்டியலைக் கோரியதுடன், “தமிழ்நாட்டில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பாக ஒன்றிய கல்வித் துறை அமைச்சகத்திடம் ஏதேனும் விவரம் உள்ளதா?” என்றும் எழுப்பிய கேள்விகளுக்கு, ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் 5.8.2021 அன்று அளித்த பதிலில், கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் மாநில மொழிகளுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்றும், 15 அல்லது

> **திராவிட இயக்கம் ஆதிக்க மொழியின்படையெடுப்பை முறியடித்து, தமிழைப் பாதுகாக்கும் அரணாகத் திகழ்கிறது.**

அதற்கு மேற்பட்ட மாணவர்கள் தங்களின் மாநில மொழியைக் கற்க விருப்பம் தெரிவித்தால் மட்டுமே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

இதுதான் பா.ஜ.க அரசின் தமிழ் மீதான அக்கறை. இவர்கள்தான்


வள்ளலார்

இந்தியாவின் பிற மாநிலங்களிலும் தேசியக் கல்விக் கொள்கையின் மும்மொழித் திட்டம் மூலம் தமிழைக் கற்றுத் தரப் போகிறார்களாம். அதனால், தமிழ்நாட்டில் மும்மொழித் திட்டம் என்ற பெயரில் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்க வேண்டுமாம்.

தமிழ்ப் பண்பாட்டை அழிக்க நினைத்து, சமஸ்கிருதம், இந்தி மொழிகள் மூலம் ஆரியப் பண்

> **தமிழ்ப் பண்பாட்டு மரபின் தொடர்ச்சிதான் திராவிட இயக்கம்.**

பாட்டைத் திணிக்க எவர் முயற்சித்தாலும் அதற்கு இந்த மண்ணில் இடம் கிடையாது என்கிற வகையில் அரை நூற்றாண்டுக்கு முன்பே தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையைச் சட்டமாக்கினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா. அந்த வரலாற்றுப் பக்கத்தைப் புரட்டினால் தான் இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களின் வஞ்சகத்தை இளைய தலைமுறை புரிந்து கொள்ள முடியும்.

(தொடரும்)

அன்புடன்

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 14
26.02.2025.

### தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக

# மருத்துவ அலுவலர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 2642 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

**சென்னை, பிப். 28 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2025) சென்னை, திருவான்மியூரில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட 2642 மருத்துவ அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 25 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் “மக்களைத் தேடி மருத்துவம்” சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் “இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்48” போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக 986 மருந்தாளுநர்கள், 1021 உதவி மருத்துவர் (பொது), 788 உதவி மருத்துவர் (சிறப்பு தேர்வு), 325 ஆய்வக நுட்புநர் தரம்III, 200 இருட்டறை உதவியாளர், 172 களப்பணி உதவியாளர், 131 உணவு பாதுகாப்பு அலுவலர், 160 இரத்த சுத்திகரிப்பு தொழில்நுட்பவியலாளர், 107 நோய்த் தீர்வியல் உதவியாளர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு மொத்தம் 4264 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக மருத்துவ அலுவலர் பணியிடத்திற்கு 5.1.2025 அன்று தேர்வு நடத்தப்பட்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தால் பிப்ரவரி 22, 23, 24 ஆகிய மூன்று தினங்கள் கலந்தாய்வு நடத்தப்பட்டு, தகுதி வாய்ந்த 2642 மருத்துவர்கள், மருத்துவ அலுவலர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். அதன்படி, மருத்துவ அலுவலர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 2642 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 25 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இப்புதிய மருத்துவ அலுவலர்கள் தமிழகமெங்குமுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள், அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரிவர்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., அசன் மௌலானா எம்.எல்.ஏ., துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் திருமதி பி. உமா மகேஸ்வரி, மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்ட இயக்குநர் ஆர். சீத்தாலட்சுமி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டி.எஸ். செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு. ஜெ. ராஜமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தமிழ்நாட்டுக்கு ஏற்படப்போகும் மற்றொரு இழப்பு!**

